2003 மே 10]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஈ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்:

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுத் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(உ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.